**பிரதம மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர்.**

இந்நீதிமன்ற உதவியாளர் திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1-ன் கீழ் மனுதாரர்/ எதிர்மனுதாரர் தரப்பு 1வது சாட்சியாக விசாரிக்கப்பட்டு 2023-ம் ஆண்டு ஜுன் திங்கள் 22-ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.

பெயர்............................................................ தந்தை /கணவர் பெயர்..............................

கிராமம்.......................................................... இனம்.............................................................

தாலுக்கா........................................................ மொழி.............................................................

மாவட்டம்...................................................... தொழில்.........................................................

---

# I.D.O.P. No. 287/2019

# 22.06.2023

**ம.த.சா.1- திருமதி. மெர்சி, த/பெ. விஜயன்**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**முதல் விசாரணை**

நான் சென்னை முடிச்சூரில் வசித்து வருகிறேன். நான் இந்த மனுவின் மனுதாரர். நான் மனுதாரர் தரப்பு சாட்சி 1. என் தரப்பு சாட்சியத்தை நான் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 22.05.2013 தேதியிட்ட எங்களின் திருமண அழைப்பிதழ் ம.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. எங்களின் திருமணப் பதிவுச்சான்றிதழின் சான்றிட்ட நகல் ம.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. எங்களின் திருமணப் புகைப்படங்களின் சான்றிட்ட நகல் ம.த.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. மைனர் சாராவின் பிறப்புச்சான்றிதழ் சான்றிட்ட நகல் ம.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. எங்களது குடும்ப அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) ம.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததன் பேரில் அசல் சாட்சி வசம் ஒப்படைக்கப்படுகிறது) ம.த.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. IDOP No.15/2015 மனுவின் சான்றிட்ட நகல் ம.த.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மேற்கொண்டு ஆவணங்கள் தாக்கல் செய்ய சாட்சியின் விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- S.Selva Sundari
Principal District and Sessions Judge,
Tiruvallur.